மழையே மழையே பூமி வருவியா
மாவீரர் உணர்வை சுமந்து வருவியா
ஈர உறவே மண்ணைப் பாரம்மா
தமிழ் ஈழம் சுமந்த கனவைப் பாரம்மா

எங்கள் தேச விழியில் தினமும் கண்ணீர் மழை தானே
எங்கள் வீர உயிர்கள் சிந்துவது இரத்த மழை தானே
எங்கள் வாசல் முழுதும் அன்பு மழை தானே
எங்கள் வீர உணர்வு பொழிவது அனல் மழைதானே

விடுதலை வேண்டி வீழ்ந்தவர் உணர்வை பாடிடவேண்டும் வா மழையே
விதைகுழி வீரம் விழித்திடும் நேரம் தழுவிடவேண்டும் வா மழையே
ஈழ மண்ணில் வீசுகின்ற காற்றுக்குட காவியம்
ஈகம் செய்த மாவீரம் எங்கள் ஜீவிதம்
மெல்லச் சாரல் பூவைத்தூக்கு சாதனையை பாடிடு
சந்ததியை வாழவைக்கும் கல்லறையின் உயிர் தொடு

மழையே மழையே பூமி வருவியா ................

களம் பல ஆடி தாய் நிலம் காத்த விழி தொட வேண்டும் வா மழையே
காவிய பூக்கள் கால்தடம் தேடி பணந்திட வேண்டும் வா மழையே
துயிலும் இல்லம் ஈழ மண்ணில் புனிதமான கோவீலே
தூங்குகின்ற மாவீரர் எங்கள் தெய்வமே
நல்ல காலம் சேரும் பொழிந்திடு கார்த்திகையை மொழிந்திடு
வாழ்வை சரித்த பகைவரை அடைமழையாய் அழித்திடு

மழையே மழையே பூமி வருவியா............